# I PUC MODEL QUESTION PAPER-2022

## TAMIL -(04)

Time : 3 Hours 15 Minutes Max.Marks : 100

[ Total No of Questions : 70 ]

**மாணவர்களின் கவனத்திற்கு** :

1. கையெழுத்து தெளிவாகவும் அழகாகவும் இருக்க வேண்டும்.
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினா எண்களை சரியாக எழுத வேண்டும்.
3. கட்டுரை ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்

## பகுதி - ஒன்று

**I. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை எழுதுக:**

**10X1=10**

1. ஒன்றாகவும் பலவாகவும் இருப்பவன் யார்?
2. அன்புடைய நெஞ்சங்கள் எவ்வாறு கலந்தன?
3. சிங்கம் பசியினால் துன்புற்றாலும் எதைத் தின்னாது?
4. கண்ணகியின் மென்னடைக்குத் தோற்றது எது?
5. கவிஞர் பாரதிதாசன் எந்த மனிதரைப் பார்த்து சிரிப்போம் என்று கூறுகிறார்?
6. நாட்டுப்புறப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள இட்லியின் நிறத்தை எழுதுக:
7. தமிழ்நாட்டில் காளத்தி மலையில் தோன்றிய வேடனின் பெயர் என்ன?
8. நிலங்கள் எந்த முறையில் அளக்கப்பட்டன?

9. பெண் திருமணத்திற்குப்  பிறகு எவற்றையெல்லாம் தியாகம் செய்கிறாள்?
10. ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் கால்  நடைகளை எங்கு வளர்க்கக்கூடாது?
11. பழங் கன்னடத்தில் எம்மொழிச் சொற்கள் மிகுந்து காணப்படுகின்றன?
12. செங்கோடன் செவ்வாழைக் கன்றை  எவ்வாறு வளர்த்து வந்தான்?
13. சிவப்புத்  தொப்பியைத்  தட்டி நின்ற ஆசாமி யார்?
14. கௌரிப் பாட்டி எப்போது கண்ணயர்ந்தாள்?
15. சேமலையப்பனுக்குப்  பிரதானமாகப்  பட்டது எது?

## பகுதி - இரண்டு

**அ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக:** **4X2=8**

16. தமிழ் மொழி எப்படித்  துலங்கி சுடர வேண்டும் என்கிறார் பாரதியார்?
17. அதியமான் நெடுமான் அஞ்சியின் அழகும் வலிமையும் எத்தகையது?
18. விருந்தினரை எவ்வாறு சிறப்பிக்க வேண்டும் என்று ஆசாரக்கோவை கூறுகிறது?
19. ‘மனோன்மணீயம்’ சிறு குறிப்பு எழுதுக::
20. எத்தகைய மனிதருக்கு என்றும் இன்பம் கிடைக்கும்?
21. புதிய அலை வீச்சில் எவையெவை மிதந்துச்  சென்றன?

**ஆ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக:** **3X2=6**

22. தளியிலார்  குறித்துக்  குறிப்பு வரைக?
23. வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரத்தில் பொன் நகையை வெளியில் கொடுக்கலாமா?  என்று கூறிய வைதீகருக்கு நகை வியாபாரி கூறியவற்றை எழுதுக?
24. பெண்ணைப் பற்றிய இலக்கிய மதிப்பீட்டில் இராஜம் கிருஷ்ணன் தன் ஆதங்கமாக வெளியிடும் கருத்து யாது?
25. லண்டன் பத்திரிக்கைகளின் அட்டைப் படங்கள் பற்றிக்  கட்டுரை ஆசிரியர் கூறுவனவற்றை எழுதுக:

26. உலகத்தை ஒரு நாணயச் சாலையோடு ஒப்பிட்டு பசவண்ணர் கூறுவது யாது?

**இ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக :** **3X2=6**

27. பாசக்கயிற்றைப் பற்றி மருதாயி கூறியதை எழுதுக:
28. தோட்டி தனக்குத்தானே பேசிக் கொண்டது என்ன?
29. அழுது அலுத்துத் தூங்கிவிட்ட குழந்தைகளைப் பார்த்ததும் செங்கோடன் அடைந்த துன்பத்தை எழுதுக:
30. வீர சிங்கத்தின் நண்பன் எதைப் பார்த்து என்ன சொல்லிக் கொண்டு ஓடினான்?
31. கௌரிப் பாட்டி இரவு முழுவதும் யார் யாரையெல்லாம் நினைத்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள்?

## பகுதி - மூன்று

**அ. எவையேனும் இரண்டிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக:** **2X3=6**

32. "உலகின்விளை பொருளெல்லாம் உதிக்கின்ற நாடு
ஒன்தொழிலும் வாணிகமும் ஓங்கியசீர் நாடு!"
33. "யாயே, கண்ணினும் கடுங் காதலளே:
எந்தையும் நிலன் உறப் பெறா அன்!"
34. " மறத்திற்கும் அஃதே துணை!"
35. ''அன்றோ? அறைவீர், அய்யோ! அதுவும்
புண்ணோ? புகழின் கண்ணே!"
36. ''வலியதோர் உள்ளம் கொண்டார்
வாழ்வதில் பெருமை கண்டார்''

**ஆ. ஏதேனும் ஒன்றிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக:** **1X3=3**

37. "அப்பா! இன்று இரவு உன் ஊருக்குச் சென்று நாளைக் காலையில் கங்கை ஆற்றைக் கடப்பதற்குப் படகுகள் கொண்டு வருக!"
38. "மகாபாரதம் பெண்நிலை நோக்கில் ஆய்வு செய்வதற்கு அரிய காரியமாகும்!"

39. ‘‘நமக்கு அசோகத் தூண் போல அதுவே அந்த நாட்டின் சின்னமாகக் கருதப்படுகிறது’’

**இ. ஏதேனும் ஒன்றிற்கு இடம் சுட்டி பொருள் விளக்கம் எழுதுக:**

**1X3=3**

40. ‘‘எழை  சாப்பிட்டாலும் பிரசாதம் தானே!’’
41. ‘‘ஐயா வீரசிங்கமாக்கும் என்றேன்!’’
42. ‘‘இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு சினிமாவைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது!

## பகுதி - நான்கு

**அ. எவையேனும் மூன்றிற்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை  எழுதுக:**

**3X5=15**

43. இறைவனின் இயல்புகளாகத்  தாயுமானவர் தெரிவித்துள்ளதை யாவை?

44. இரவுக்குறியில் சந்திக்க முற்பட்ட தலைவனை மறுத்து  தோழி தலைவனுக்குக் கூறியதாக அமைந்த கபிலர் பாடல் கருத்தினை எழுதுக:

45. அன்புடைமையின்  சிறப்பினைத்  திருவள்ளுவர் எவ்வாறு விவரித்துள்ளார்?

46. ‘‘கண்ணம்மா என் குழந்தை’’  என்ற பாடலில் கவி சுப்பிரமணிய பாரதியார் கூறியுள்ளவற்றை எழுதுக:
47. ‘‘கனவுகள் + கற்பனைகள் =  காகிதங்கள் எனும்  புதுக்கவிதையில் கவிஞர் மீரா கூறும் கருத்துக்களைத்  தொகுத்து எழுதுக

48. ‘சட்டம்’  என்ற கவிதையில் கவிஞர் வைரமுத்து கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக?

**ஆ. எவையேனும் இரண்டிற்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக:**

**2X5=10**

49. காளத்தி மலையில் அமர்ந்த ஈசனுக்கு ஆளாகக் கருதிய பட்டினத்தார் கூறிய கருத்துக்களை எழுதுக :

50. குடியரசு பத்திரிக்கைக் கட்சியைச் சேர்ந்தவர்களைப் பற்றிக் கூறியவற்றை எழுதுக
51. உலகத்திலேயே அழகிய பகுதி என்று கட்டுரை ஆசிரியர் கூறும் இடத்தின் சிறப்பம்சங்களை விவரித்து எழுதுக?
52. பசவண்ணரின் கவி மனத்தைக் குறிப்பிடுக

**இ. எதையேனும் இரண்டிற்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக:**

**2X5=10**

53. ‘உன்னை என்ன செய்கிறேன் பார்! ! என்று உறுமிக் கொண்டு எழுந்து எமனை பார்த்து மருதாயி சொன்னவற்றை எழுதுக?

54. ‘‘செவ்வாழையைக் கண்டு செங்கோடன் சந்தோஷம் அடைவதற்கான காரணங்களை விவரித்து எழுதுக

55. ‘யுகசந்தி’ சிறுகதை கூறும் சமூகக் கருத்துக்களை எழுதுக:
56. மருமகள் வார்த்தைகளால் சேமலையப்பன் அடைந்த துன்பத்தை விவரித்து எழுதுக:

## பகுதி - ஐந்து

**அ. கீழ்காணும் பாடலின் பொருளை எழுதி அணியை விளக்குக:**

**1X5=5**

57. ‘‘செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே’’

அல்லது

58. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்

**ஆ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக:**

**4X2=8**

59. கீழ்வரும் தொடர்களில் எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக:
உலவன் பயிற்ளுக்கு தன்னீர் பாய்ச்சினான்.
மானவன் அலகாக ஓவியம் திட்டினான்

60. சேர்த்து எழுதுக:
புன் + கண்நீர்
அன்பு + உற்று

61. பிரித்தெழுதுக:
முத்தமிட்டால்
கதைகளெல்லாம்

62. எதிர்ச்சொல் எழுதுக:
குனிந்து X
வெள்ளை X

63. கீழ்வரும் தொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக:
குடி பிறப்பாளர்
தாளாண்மை

64. கோடிட்ட இடங்களை நிரப்புக
நீருக்கு ----------- அலங்காரம்
வானிற்கு --------- அலங்காரம்

## பகுதி - ஆறு

**அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக:**

**1X5=5**

65. பாரதிதாசனின் தமிழ்ப்பற்று குறித்துக் கட்டுரை எழுதுக

66. சிக்கனமே சீரான வாழ்வைத் தரும் என்பது குறித்து கட்டுரை எழுதுக
67. இசை நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் பயணிப்பது உண்மை என்பது பற்றி கட்டுரை ஒன்று எழுதுக:

**ஆ. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு விடை எழுதுக:**

**1X5=5**

68. உங்கள் பகுதியில் நூலகம் அமைத்துத் தர வேண்டி, ஒரு விண்ணப்பக் கடிதம் எழுதுக:
69. நீ கண்டு களித்த அறிவியல் கண்காட்சிப் பற்றித் தோழிக்கு ஒரு கடிதம் எழுதுக:
70. ''அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்'' என்றப் பழமொழியை விளக்கி வாக்கியத்தில் அமைத்து எழுதுக: